
கேள்விபதிலும்!
அனுபவ ஞானமும்!!
இதழ் ௨
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா




# கோஷ்டிபதியும்! அநுபவ ஞானமும்!!

## இதழ் ௨

# பொருளடக்கம்

1. அனுபவ ஞானம்----------------------------------------------------------50

எல்லாம் நீ!



(ஸத்திய வாக்கு)

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!

"ஸத் குரு திருவடி துணை"!

"நம்பினோர் கெடுவதில்லை"!

"தெய்வம் மனுஷ்யாணாம்"!

"யத் பாவம் தத் பவதி"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம்"; ஓம்!

"அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம்",

"அகமே எல்லாம்"!

"ஜகம், பரமும், ஜீவர்களும்",

அடங்கு. "ஸ்திரம் இல்லை"! அடங்கு.


அடக்காதே. அடக்காதே.



உ

# அனுபவ ஞானம்

அன்பும், அறிவும், நிறைந்த ஆத்மானந்த குழந்தைகளே, சூட்சும நாமரூப, ஸ்ரீஇறைவன், எனச் சொல்லும் போது, ஸ்ரீபிரம்மனும், ஸ்ரீநாராயணனும், ஸ்ரீசிவபெருமானும், இடம் பெறுகிறார்கள்; என மட்டும் உணர வேண்டும். அடுத்து, ஸ்ரீமஹான் களால், சொல்லப் படுவது, ஸ்ரீவிநாயக பெருமானும், ஸ்ரீமுருகப் பெருமானும், என உணரவேண்டும். அடுத்து, ஸ்ரீமஹான் களால் சொல்லப்படுவது, ஸ்ரீராமபிரானும், ஸ்ரீகண்ணபிரானும், என உணர வேண்டும். மேலே கூறிய, ஐவரும் (பிரம்மன், நாராயணன், சிவபெருமான், விநாயகன், முருகன்) இவர்களில் மூன் மூவர், தோற்றம் மறைவு இல்லாமல், அன்பு மட்டும் உடையவர்கள்




என்றும், பின் இருவர் தோற்றமும், இருப்
பும், மட்டும் உடையவர்கள் என்றும்
மறைவு, இல்லாதவர்கள் என்றும்,
பின் இருவர், தோற்றம்/ இருப்பு/ மறைவு/
என இம் மூன்றும், உடையவர்கள் என்றும்
ஸ்ரீமஹான்களால் சொல்லப்படுகிறது.

(A) பிரம்மன்/ நாராயணன்/ சிவபெருமான்/
ஆகிய இம் மூவரும், மஹா காரண சூட்சும
நாமம் மட்டும், உடையவர்களாகும். பின்

(B) விநயகன்/ முருகன்/ ஆகிய இவ்
விருவரும் காரண சூட்சும நாமம்
மட்டும், உடையவர்களாகும். பின்


(C) ராமன்/ கண்ணன்/ ஆகிய இவ் விரு
வரும், சூட்சும நாமரூபம், உடையவர்களா
கும்.
என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.




(A) மஹா காரண, சூட்சும ரூபம் என்றால்; காலாதீத, பரசொரூபத்தின் பூரண அம்சம் இருப்பதால், இயக்கம் அற்றதாகும்.

(B) காரண சூட்சும ரூபம் என்றால்; இதுவும், காலாதீத, பரசொரூபத்தின் அம்சமே. ஆனாலும், இயக்கம் சூட்சுமமாக (ரகஸ்யமாக) இருக்கும்.

(C) சூட்சும நாமரூபம் என்றால்; இதுவும் காலாதீத, பரசொரூபத்தின் அம்சமே. ஆனாலும், இயக்கம் சூட்சுமமாக இருந்தாலும் மனக்கண்களுக்கு, ஸ்பஷ்டமாக தோன்றும். அதன் காரணம்; இவ்விருவரும், கருவறையில் இருந்து வெளிவந்ததாக, ஓர் தோற்றத்தை காட்டினார். அவ்விருவரும், திருஷ்டியின் சிருஷ்டி ஆகும் என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.




விநயகனையும், முருகனையும், அறிவு
கண்ணால் மட்டுமே, முதலில் உணரவும்.
பின் காணவும் முடியும்.
ராமனையும், கண்ணனையும், மனமானது
புத்தியாகி; அப்புத்தி கூர்ந்த புத்தியாகி,
(இது அறிவின் அடுத்த நிலையே) கற்பனை
உறுதி ஆனால், காணவும், உணரவும்,
முடியும். காணும் நிலை, சாட்சி பாவனை
ஆகும். அறியும் நிலை, சர்வ சாட்சியின்
ஆரம்பமும், சாட்சி பாவனையின்,
முடிவும் ஆகும். அதேபோல்,
பிரம்மனையும், நாராயணனையும், சிவ
பெருமானையும், காணவும், உணரவும்,
முடியும். இம் மூவரும், நாமா மட்டும்,
சம்பந்தப் படுவதால், நாமோச்சாரண
மோ!






மந்திரோச்சாரணமோடு செய்யும்
போது, அவர்களுக்கு, ரூபம் இல்லாத
தன்மையினுல், அவர்களின், யோக
மாயா, ஓர் உருவத்தை கொடுக்கும்
என்றும், தோன்றவாம் என்றும்,
ஸ்ரீமஹான்கள், வாயிலாக அறிகிறோம்.
ராமனையும் & கண்ணனையும் தவிர மற்றும்
ஐவருக்கும், ரூபம் பெறுவதாக இருந்தால்,
மாயாவே, தோற்றத்தையும், இயக்
கத்தையும், கொடுக்கும் என்றும்,
கொடுக்க வேண்டும் என்றும், இது
பரகருணையின், (யோகமாயாவின்)
காரியம் என்றும், ஸ்ரீமஹான்களின்,
வாயிலாக அறிகிறோம்.
மேலும், இதற்கு விளக்கம் வேண்டாம்.



இவர்கள் ஐவரும், பர சொரூப,
அம்சமாகவே இருக்கிறார்கள்.
ஆகவே, இந்த ஐவரும், இயக்கம் அற்ற
வர்களே! மாயா வால், இரும்புச்
இயக்கமும்! பெறுகிறார்கள். இவர்களின்,
நாமா! பரசொரூப அம்சமாகும்.
இந்த நாமாக்களையும்! இவர்களின்
தோற்றங்களையும், கொடுத்தவர்கள்,
ஆதிபரிமளநான்களே.
காரணம் என்றால் நாமா வாகும். காரியம் என்றால் தோற்ற மாகும்.
காரணம் = பரம்! காரியம் = மஹத் & ஜகத்.
மஹத் = உயிரினமற்ற ஜடசொரூபம்.
ஜகத் = உயிரினங்களை உடைய ஜடசொரூபம்.
மஹத்தோ! ஜகத்தோ! அனைத்து உயிரினங்
களின் தூலம்! எல்லாம் மண்ணே! மண்ணே
எல்லாம்! மண் = பரம்! பரம் = மண் ——— பரம


(56)




பாடல் (1) சில குறிப்பிட்ட விளக்கங்கள்.

சுத்த ஸிதாகாயமதாய் - எந்த வஸ்து,
சுதந்திரமாய் தமது பர & மாயாவோடு, (சக்தியோடு)
பக்தர்கள் உய்வதற்காக கருணையோடு,
பர தத்வம் வடிவமாக திரண்டு, உருண்டு, ஓர்
வடிவாய், அத்வைத, ஆனந்தம், ஸ்வய
அனுபவத்தில், உணரும் நிமித்தம்,
மனித ஜீவர்கள், அதிசயமாய் அறியும் நிலையில்,
எந்த விநாடியும், ஆத்மானந்த நடனம் செய்கிறது.
அந்த பரசொரூப வஸ்துவை வணங்குவோம்.


பொருள் :- காலாதீத பரசொரூபமானது,
பக்தர்களுக்காக தாமே இறங்கி வருவதாக, இப்பாடல் அமைகிறது.
தாமே, கருணையுடன் வரும், அப்பரசொரூபமானது, எப்படி தம்மை விளக்குகிறது
என்றால் ? தாம், காலம் கடந்த ஒன்றாக,
இருந்தாலும், (தாமாகிய பரமும்)




மாயாவை பற்றிய நிலையில்,
காட்சிக்கு எளியான் என்ற நிலையில்
பரமாத்மா என்ற, ஸ்ரீபகவானாகவும்,
மனதால் பந்தப்பட்ட ஜீவாத்மா ஆகவும்
தாமே ஆனது. அந்த பரசொரூபமே,
தம் அம்ஸ, ஜீவாத்மாவை, மனதின்
பிடியிலிருந்து, குருவாக வந்து நீக்கியது.
மனம் நீங்கிய தன்மையிலே, அந்த ஜீவ
ஆத்மா, பரமாத்மா என்ற, ஸ்ரீபகவான் என ஆனான்.
அந்த ஸ்ரீபகவானானவன், தம் அம்ஸ,
பரத்தின் கருணையால், மாயாவை விட்டான்.
மறுவினாடி, ஸ்ரீபகவானும் பரமும் ஒன்றானார்கள்.
இதன் உட்கருத்து:- பரத்தின் யோகமாயாவின்
விளையாட்டு ஸ்ரீபகவான் ஆகும். ஸ்ரீபகவானின்
யோகமாயாவின் விளையாட்டு, ஜீவாத்மா ஆகும்.
ஜீவாத்மாவின் மனதின் விளையாட்டு, நாமரூப
ஜக ஜீவ, தோற்றங்கள் ஆகும் என உணர்க.




இங்கு, தத், த்வம், அஸி! என்பது?
தத்பத பரமாத்மாவும்! த்வம்பத ஜீவாத்மாவும்!
அஸிபத பரசொரூபத்திற்கு, அன்னியமில்லை
என்றும், இதனினும், மேலான கருத்தானது:-
பர, தத், த்வம், என்ற நிலையில் காலாதீத பரசொரூ
பமே! தத்பத, பரமாத்மாகவும்! த்வம் பத,
ஜீவாத்மாகவும் இருக்கிறது என்றும், இம்
மூன்றும் காலாதீத பரசொரூபமே என,
கலக்க பயமின்றி, தெளிக என்கிறார்.
உனக்கு கலக்க, மயக்க, சந்தேக,
பயம், தெரிவதெல்லாம், மனோமயபிராந்தி
மயக்கமேயாகும். இம்மயக்கம், வரக்
காரணம்:- நாமரூப ஜக ஜீவ! தோற்ற
ங்களெல்லாம், எனது என உடைமை
உரிமை! கொண்டாடுவதே காரணம்
என்கிறார்.




முடிந்த முடிவாக, என்ன சொல்கிறார் என்றால்?
ஜீவனை கடைத்தேற்றவே, பர சொரூபத்
திலிருந்து, இறை சொரூபமாகவும்,
குரு சொரூபமாகவும், வந்திருக்கிறது என்றும்.
ஓர் பக்தனை, ரசிக்கப் போகிறோம்.
என்ற, ஆத்மானந்தத்தில், பரமும், மாயாவும்,
ஒருங்கிணைந்து, வருகிறதென்றும். அதை
வாக்கிய, உபசார விளக்கமாக, சொல்லும்
போது :- அத்வைத ஒன்றானது, துவைத நிலையில்
பரமும் & மாயாவுமாக திரண்டு, உருண்டெழுந்து
ஆனந்த நடனம், செய்து கொண்டு வருகிறது
என்றும். (ஒன்று என்றால் இயக்கம் இல்லை
பரம் & மாயா என இரண்டானால் இயக்கம்
உண்டு என்றும். அவைகள் இறங்கி
கருணையோடு வருவதையே, இரண்டும்,
ஆனந்த தாண்டவம் ஆடி வருகிறது)



உபசார வசனமாக, ஸ்ரீ அனுபவ மஹான்
கள் சொல்லி வைத்தார்கள். இதில்,
ஐந்து மூர்த்திகளும் பொருந்தாது என்பதே,
ஸத்தியம். இதுவே, முதல் பாடல் விளக்கம் ஆகும்.
பாடல் 2 அப்படி, இறங்கி வரும் பரசொரூ
பமானது, முன் அத்தியாயத்தில் வரும்,
பிரம்மன், நாராயணன், சிவபெருமான்,
விநாயகன், முருகன், ஆகிய ஐவரையும்,
நாமரூப உலகில், லௌகீக நிலையில்,
பக்தி பண்ணி, மேல் நிலைக்கு வருபவர்க
ளுக்கு மட்டும், தேவ தெய்வங்கள் ஆகும்
என்றும் அது, அவர்களுக்கு மட்டுமே, பொருந்தும் என்றும்
பிறவா நிலையாகிய, ஜீவன் முக்தி பெறுப
வர்களுக்கு மட்டும், அந்த ஐவரும் தேவ
தெய்வம் இல்லை என்றும், அவர்களுக்கு, அந்த
ஐவரும், ஸத் குரு ஆவார்கள் என்று, உரைவேண்டும்.




அந்த ஸத்குரு மூலமாக உணர்ந்து வதாவது:
மேலே கூறிய அந்த பர சொரூபமானது, தான்
கீழே இறங்கி வரும் நிலையில், ஸத் என்றும்,
ஸின்மாத்ரம் என்றும், ஸித்பரம் என்றும்,
ஸிதாகாயம் என்றும் ஸின்மயம் என்றும்,
இன்னும், அனேக நாமாக்களை தரித்துக்
கொண்டதாக, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
மேலே கூறிய இவைகளை, அறிந்து உணர,
தன்னையே அறிவு! என ஆக்கிக்கொண்டது.
இந்த அறிவானது, மாயா சம்பந்தம் கொண்டால்
அது ஸ்ரீ பகவான் ஆகும். இந்த அறிவானது, ம
மண சம்பந்தம் கொண்டால், அது ஜீவாத்மா
என ஆகும். இந்த அறிவானது, எந்த சம்பந்
தமும் இல்லாமல், தனித்து நின்றால், அதுவே
ஆத்மா ஆகும். ஆத்மாவே, மணதை நீக்கினால், அது
பரமே! ஆத்மாவே, மாயாவை நீக்கினால், அது
பரமே! ஆத்மாவே, தனித்து நின்றால், அதுவே
பரமாகும்! என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.






ஆத்மாவே அறிவு! அறிவே ஆத்மா! என இருப்பதனை, மறை பாடத்தின் நிமித்தம், ஆத்மாவை அறிவு! அறிந்துணர்கிறதென, ஸ்ரீமஹான்கள் சொல்வர். மறைபாடத்தின் நிமித்தம், விளக்கம் தரும் போது,

அறிவுருவான ஆத்மாவானது, (பரமும் & மாயாவும்) இணைந்த நிலையில் அசைக்கும் நிலையை பெற்றிருக்கிறதென்றும், ஆனால் அசைவில்லை யென்றும், அப்படி அசையா நிலையை, ஸத் என்றும், அதுவே அசைந்த நிலையை, ஸித் என்றும், அதுவே அசைவதால் பெறும் ஓர் உணர்வை, ஆனந்தம் என்றும், இம்மூன்றும், இணைந்த நிலையில், அதுவே, ஸத் ஸித் ஆனந்தம்! என்னும், பரசொரூப நிலையை தொடுகிறதென்றும், ஸ்ரீமஹான்கள் சொல்வர்.




இதில் ஓர் ரகஸ்யம் அடங்கி இருக்கிறது.
அது யாது எனில்:- பரசொரூப நிலையில்
ஸத், ஸித், ஆனந்தம், என்றும் மனோ
மயக்க நிலையில், இருப்புடைய ஸத்தை,
மனக்கண் காண முடியாதன்மையினால்,
மனக்கண் காணும் நிலையில், மனோமய
கற்பனை நிலையில், ஸத்தை நாமரூபமாக
பாவனை பண்ணி, ஸித்தை நாமரூபத்தின்,
அசைவின் நிமித்தம், சித்தம் என, பாவனை
பண்ணி, ஆனந்தத்தை சித்தத்தின்
அசைவில், தோன்றும் இன்பதுன்பம் உண்டு
இன்பமாக, பாவனை பண்ணி, கூடிக்களிப்பு
அடைவது மனமாகும். மனம், புத்தி, சித்தம்,
இம் மூன்றும் ஒன்றே. இம்மூன்றையும் விகார,
நிர்விகார நிலையில், கண்டால், நாமரூப ஜகமே,
தோஷ விகார, நிர்விகாரம், இல்லாமல் உணர்ந்தால் பரமே,




பாடல் 3

இப்பாடலில், ஆணித் தரமான உண்மையை,
எப்படி சொல்கிறார் என்றால்? முன்பே சொன்னோம்.
பரமே ஆன்மா, ஆன்மாவே பரம், ஆன்மாவே அறிவு,
அறிவே ஆன்மா, இந்த நிலையில்?
பரம் என்றால் அகண்டம், ஆன்மா என்றால்
கண்டம் என்று கொள்ள வேண்டும். இவ்விரண்டும்
மண்ணே (உபயோக மற்றது) ஆன்மா என்றால்,
அளவுக்கு அடங்கிய மண், பரம் என்றால் அள
விட முடியாத, பரந்து விரிந்த மண், நாம் மனதின்
வசம் இருப்பது போல், பாவனை செய்து கொள்வோம்.
ஆகவே, நம் பூமியை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

ஆன்மாவால், சர்வ வியாபகமான
இப்பூமியில், மண், மலை, ஜலம், தாவர வர்க்
கங்கள், மனித இனம் உட்பட அனைத்து
ஜீவசரீரங்களும், ஆக இந்த, ஒட்டுமொத்தமாக
(ஜீவர்கள் அல்ல)




எல்லா நாமரூபங்களும்! ஆன்மா என்ற
மண்ணே! மண்ணுக்கு அயலாக, எதுவும்
இல்லை என்பதே ஸத்தியம்.
எல்லாம் மண்ணாகிய ஆத்மாவே!
ஆத்மாவாகிய மண்ணே எல்லாம்!
மண்ணாகிய ஆத்ம சொரூபத்தில், ஆன்மாவின்
பிரதிபிம்பமான, மனம்! புத்தி! சித்தத்தின்!
கற்பனையேயன்றி, வேறொன்றுமில்லை என்பதே
ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!
இங்கு நாமும், ஆன்மாவுக்கு அயலாக இல்லை.
ஆன்மாவே நாம்! நாமே ஆன்மா! என உறுதியுணர்!
பரமாகிய ஆன்மாவும்! ஆன்மாவாகிய பரமும்!
ஆன்மாவாகிய நாமும்! நாமாகிய ஆன்மா
வும்! ஆன்மா ஆகியயாம் அன்றும்! இன்றும்!
என்றும்! என்றென்றும், ஒன்றே ஆகும்! இரண்டல்ல.



ஆதி! நடு! அந்தம்! எனமூன்றும், இல்லாது
யாம், என்றென்றும், அகண்ட ஜோதியே.
கண்டம் என, எம்மை உணர்ந்தாலும்,
எம் பிரதிபிம்பமான, மனம்! புத்தி! சித்தத்தால்!
நாமரூப, ஜக ஜீவ, தோற்றங்களாகமமைய
கற்பனை நிலையில், கண்டாலும், பேசினாலும்!
கேட்டாலும், வரிவடிவில் எழுதினாலும்!
அனைத்து நாமரூப, தோற்றமும், மண்ணாகிய
யாமே! யாமாகிய மண்ணே! மண்ணாகிய
பரமே! பரமாகிய மண்ணே! எல்லாம் யாமே!
எமக்கு அன்னியமாய், எதுவும் இல்லை.
என்ற பர உணர்வோடு, ஸ்திரமாக இருந்து,
நாமரூப ஜக ஜீவ, பர ஐக்கியமே என
உணர வேண்டும்.









பாடல் 4

நாமரூப, ஜக ஜீவ, தோற்றங்களுக்கு;
அவைகளை, உண்டாகியதாக கூறும் பிரம்மனும் இல்லை.
அவைகளுக்கு, இது இன்னது! இது இப்படித்தான்
நடைபெற வேண்டும்! இது இப்படித்தான் முடிய
வேண்டும் என, விதிக்கும் விதா தேவனும்
இல்லை. பிரம்மன் உண்டாக்கியதாக
கூறும், நாம ரூப ஜக ஜீவ சொரூபங்களை,
பரிபாலனம் செய்கிறேன். எனக் கூறும்,
நாராயணனும் இல்லை. மேலே கூறியவைகளை,
மாற்றும் & மறைவு என செய்யும், அழிக்கும்
தொழிலை உடைய சிவபெருமானும் இல்லை.
இதில் கூறிய, நால்வரும் மாயா சூட்சும
எந்த நாம ரூபத்துடனும் இல்லை. அந்நால்வரும்
பரமாகிய மண்ணாகவும்! மண்ணாகிய பரமாகவும்!
பாமாகிய பரமாகவும்! பரமாகிய பாமாகவும்!
லட்சியமாக இருக்கிறார்கள். ஆனல் ஸத்ருபாக இருக்கிறார்கள்




பாடல் (5)


ஆதியும் இல்லை அதனால் அந்தமும் இல்லை.
அந்தமும் இல்லை. ,, ஆதியும் இல்லை.
தோற்றமும் இல்லை. ,, சொந்தமும் இல்லை.
சொந்தமும் இல்லை. ,, தோற்றமும் இல்லை.
பந்தமும் இல்லை. ,, முக்தியும் இல்லை.
முக்தியும் இல்லை. ,, பந்தமும் இல்லை.
எந்த ஹறைடியும், எக்காலமும், முக்காலமும்
ஸின்மய பர சொரூபமான, ஆன்மா ஒன்றே
சஞ்சலம் இல்லாத, சலியாத, அசையாத,
அசைக்காத, வஸ்துவாக இருக்கிறது.
அதுவே நாமாகவும், நாமே அதுவாகவும்
இருக்கிறோம்.
இதன் கருத்தை மேலோட்டமாக காணாமல்,
உள் ஆழ்ந்து உணர்ந்தீர்களானால்
நாமரூப, ஜக ஜீவ, உறவு, சுற்றம், நட்பு, சொந்தபந்தங்கள்
பூ பூ பூ பூ என, ஊதி பறந்து விடலாம்.



அந்த நாமரூப, ஜக ஜீவ, உறவு சுற்றம் நட்பு
முதலியவைகளுக்கு, ஆதி உண்டா? நடு உண்டா?
அந்தம் உண்டா? என உணர்ந்து நோக்கினால்,
எதுவும் இல்லையென்பதே ஸத்தியம்.
உடனே, முன்ஜன்ம தொடர்பு உண்டென
நீங்கள் தானே சொல்கிறீர்கள்?
என, எம்மை கேட்கலாம்?
யாம் என்ன சொன்னோம்? வினைத் தொடர்புதான்
உண்டே தவிர! சொந்த, பந்த, பாச, உறவு,
பற்றின், தொடர்பு இல்லையென்பதே ஸத்தியம்.
அதாவது, கொடுத்ததை வாங்க வேண்டுமென்றும்,
வாங்கியதை, கொடுக்க வேண்டும் என சொல்
வது, ஒன்றுக்கு ஈடாக மற்றொன்றை கொடுப்
பதும் வாங்குவதும் ஆகும். இந்த உறவு சுற்றம்
எல்லாம், சந்தையில் கூடுவது போலும்!
சினிமாவில் கூடுவது போலும்! பஸ், ரயிலில்,




கூடி
ஒன்றாக, பிரயாணம் செய்வது போலும்,
ஒரு நாள் கூத்து ஆகும். இச்ஜன்மா காரியம், அடுத்த
ஜன்மாவில், வினை பரிமாற்றம், வித வித
மாக அமையும். ஆனால் பற்று வரவு,
நீங்கும் நிலையிலும், பின் தொடரும் நிலை
யிலும், அமையுமே தவிர இனம், பொருள்,
ஒன்றாக அமையாது, அமைய இயலாது.
உதாரணம்:— நீ போன ஜன்மாவில், ஒருவரிடம்
பணம் மோசடி செய்தால், இந்த ஜன்மாவில்,
ஒருவரிடம் பெருமான, பூமியையோ, வீட்டையோ,
இன்னொருவரிடம் இழக்க நேரிடும்.
நாமரூபமும் மாறும், நபரும் மாறும், ஆனால்
பொருள் தகுதி மாறாது.
நாமரூப விகார நிலையில் நடைபெறும்.
" " ஒற்றுமை " முடிவுறும்.




இதை வைத்து நீங்கள் உணருமிடத்து:-
தாய், தந்தை, கணவன், மனைவி, குழந்தை,
மற்றும், உறவு, சுற்றம், நட்பு, எல்லாம்,
உன் நல்வினை தீவினையும், ஈடாக வைத்து
அவர்கள் ,, ,, பகிர்ந்து, உன்
கணக்கு முடிக்க, வந்தவர்களேயாகும்.
பந்தபாசத்தால், பிணைக்க வந்தவர்களல்ல.
உங்கள் மனமானது, இந்த சொந்த பந்தங்களை
விடலாகாது என, உடலின்பத்தால், பிணைக்
கப்பட்டுள்ளீர்கள்; என்பதே சத்தியமாகும்.

ஆகவே?

இந்த, நாமரூப, ஜக ஜீவ, தோற்றம்
அனைத்துமே, ஆதி, நடு, அந்தம், இல்லாத,
மாயா ஜால மனதின், காட்சியே
யன்றி, வேறு ஒரு புண்ணாக்கும் இல்லை.




இப்பாடலின், ரத்தின சுருக்கம் என்ன
வென்றால்? கவனிக்கவும். மனதால்
தோற்றம் என, ஒன்று உண்டானால்
மனம் உண்டாக்கினால்
அதை எனது என, சொந்தம் கொண்
டாடும், புத்தியோ, சித்தமோ, உண்டாகும்.
மனதால் உண்டான, நாமரூபத்தை,
எனது என சொந்தம் கொண்டாடி
னால், பந்தம் என்னும், பிறவித்தளை
இயல்பாகவே உண்டாகிவிடும்.
பந்தம் என்னும், பிறவித்தளை உண்
டானால், அதை நீக்கம் பண்ணும், சாதனை
யும், அச்சாதனையால், ஜீவன் முக்தியும்,
தேவைப்படும். இவை மனமும், மாயாவும்,
இணைந்து நடத்தும், ஓர் விளையாட்டாகும்.
இந்த சொந்த, பந்த பாச விளையாட்டெல்லாம், மனதுடையதேயாகும், உண்மையாய் இல்லை.





நாமரூப ஜகத்தை, உண்டுபண்ணுவது மாயா ஆகும்.
அந்த நாமரூப ஜகத்தை, வைத்து விளையாடுவது மனம்.
அந்த மாயாவும், மாயாவின் மனமும், ஞூம்
யாமும் அல்ல! எம்முடையதும் அல்ல!
இப்பாடலில், அந்த உண்மையையும் உணரவும்.
காலாதீத பரசொரூபத்திற்கு,
ஆதி நடு முடிவு இல்லை. அதன்காரணம்
அந்த ஒன்றுக்கு, எந்த தோற்றமும் இல்லை.
வாக்கிய விளக்கமாக, ஸ்ரீமஹான்களால்,
சொல்லப் படுவது, அகண்ட பேரொளி
என்ற, ஸத்திய வாக்கு மட்டுமே. ஆகவே,
இப்பாடலில் கூறும், கோடி வார்த்தைகளான
தோற்றமும்! தோற்றத்தால், எனது எனு
சொந்தமும்! அப்படி சொந்தம் கொண்டாடி
யதால், பந்தமும்! பின் அந்த பந்த நிவர்த்தி
செய்யும், நிலையில் ஜீவன் முக்தியும் இல்லை.






அந்த ஒன்றுக்கு அன்னியமாக, ஒன்று இருந்தாலல்லவோ, இப்பாடலின் கருத்து நமக்கு வேண்டும். ஆகவே, அக்கருத்து ஆத்மாவாகிய, நமக்கு தேவை இல்லை என்றும், நாமே ஆத்மா! நாமே பரமாத்மா! நாமே பரசொரூபம்! எல்லாம் நாமே! என இதை ஆர்த்தி செய்கிறோம்.

இந்த ஸ்வய ஞானனுபவ நூலில், 1,2,3,4,5 பாடல்களின் விளக்க அனைத்து பாடல்களிலும், பொதிந்து மே! இருப்பதாக, ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம். இனி அடுத்து சில முக்கிய பாடல்களின், கருத்தை மட்டும் தருகிறோம்.

உணர்க ஒன்றுக கரைக மறைக

இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! பாபா.

அதுயாமே! யாமே அது! அதுவே நீங்கள். இது சத்தியம்.




பாடல் 6.

கடைசி இரண்டு வரி.

அயல் அணுவும் அணுகாத அகண்டமா
அத்வைத பரப்பிரம்மம் ஆவரன்றே. ஞான;


பொருள்:- நமக்கு அயலாக ஜீவர்களோ! ஈஸ்வராதிகளோ! இல்லையென மட்டும், சொல்ல விடலில்லை. ஓர் உண்மையை உணரவே. நாமரூபம் என்றால், எது என கேட்டால்? ஓர் ரூபம்/ அதற்கு ஓர் நாமம்/(பெயர்) அது எதால் ஆனது என்றும்? என்ன செய்யும் என்றும்? அதன் இருப்பையும்/ இயக்கத்தையும், விளங்கும் குணம் உடையதாக, இருந்தால் மட்டும், அது நாம ரூபம் ஆகும் என, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

சஞ்சாரம் செய்யாதன எல்லாம் நாமம் மட்டும் பெறுகிறது என உணரவும்.




76

சஞ்சாரம் செய்வன அனைத்தும்,
நாம ரூபம் பெறுகிறது என, உணர வேண்டும்.
நாமம் சூட்சுமமாக இருப்பதால், அது பரசம்
பந்தத்திற்கு வழி வகுத்து கொடுக்கும்.
ஆனால் பரம் ஆகாது என்பதே ஸத்தியம்.
ரூபம் ஸ்தூலமாக தோற்றுவதால், அது குணமும்
பற்றும். வினையும் பற்றும். ஆகவே அது
ஜக சொரூபமாகும். இதைப் போலவே,
ஸ்ரீபகவானானவன், சூட்சும நாம ரூப ஏக
குணம் உடையவன். ஸ்ரீபக்தர்களாகியும்,
ஸ்ரீமஹான்களாகியும், இருந்து கொண்டு,
ஜீவ உத்தாரணம் நிமித்தமாக நாம்
பரஅம்ஸமாக இருந்தாலும், இறை சொரூப
தத்திற்கென்றே, சூட்சும நாம ரூப ஏக குணம்
பெறுகிறான் என, ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறி
கிறோம்.



பரசொரூபமே, யோகமாயாவின் துணை
யுடன், ஸ்ரீபகவான் ஆகிறான். லோக
சம்ரக்ஷணார்த்தமாக, யோகமாயாவின்
துணையுடன், தாமே ஜடமாகிய உலகமாகி,
தாமே, நாம ரூபமுடைய, அனைத்து ஜீவ
கோடிகளாகி, மாயா மனதை வைத்து,
விளையாடிக் கொண்டிருக்கிறான் என உணர
வேண்டும். தோற்றத்திற்கு மாயாவும்
இயக்க விளையாட்டிற்கு மனமும் பயன்படுகின்றன.
இனி பாடலின் விளக்கம் பெறுவோம்.
நமக்கு அன்னியமாக, எந்த நாம ரூபமும்
அது வாதைய பரமாகாது. அது ஜகமாகும். ஏக குணம்
ஸ்ரீபகவானுக்கும், குணாதீதநிலை பரசொரூபத்திற்
முக்குணமும், திரிகுணமும், ஜக ஜீவர்களுக்குமே
பொருந்தும் என, அறிக. இதை அறிவா விட்டார்க.




ஆகவே, மனதை மறந்தாக்கிய நிலையில்,
நாமரூப, ஜக ஜீவ தோற்றம் இல்லை
இல்லை என்ற நிலையில், எல்லாம் நாம்
ஆன தன்மையினால், அத்வைதானந்த
பரம் நாமே என, சும்மா சுகமாக இருப்போம்.


பாடல் 10. கடைசி இரண்டு வரி.

நினைவின்றி நிற்பதுவே சிவமும் ஆகும்.
நினைவணுவும் இல்லை எல்லாம் பிரம்மம் தானே.


பொருள்:- எண்ணமே நினைவாகும்.
நினைவே வாக்காக மாறும். வாக்கே
செயலாகவும், அதன் கர்மாவாகவும் மாறும்.
அப்படியானால், நினைவு என்ற, எண்ணமில்லாமல்,
எப்படி இருக்க முடியும்? என்ற கேள்வி எழலாம்?
அந்த எண்ணத்தை, சில முறைகள்
நிமிஷமல்வு உணர்ந்தால் போதும்.



(A) பணம் / பொருள் / சம்பந்தமாக இருந்தால்,
அது ஜடசொரூபம் அறிவற்றதாகும்.
அசைவற்றதாகும். அப்பொருள் இது → ஆசைமனதை அசைப்பதாகும்.
எனது / என பாராட்டினாலும்; அவன் / அவள்
உடையது என பாராட்டினாலும். உன் மனோ
பாவனையின், தோஷ குணம் / உண்மையாகும்.
இது ஸ்ரீபகவான் பொருள் என பாராட்டினால்,
ஸ்ரீபகவானின், ஏக குணம் அன்பு / பொறுமை /
பணிவு / கனிவு / இனிமை / எளிமை / கருணை /
நம்பிக்கை / முதலிய, எண்குணமும்
உன்னை ஆட்படுத்தும். அடுத்த படி
ஸ்ரீபகவானை, அவனே நாம் / நாமே அவன் என
வைராக்கியம் பூண்டால், நிர்குணம் பெற
ஏதுவாகும். அவனும் நாமும் ஒன்றானபின்னர்
அதுவே நாம் / நாமே அது / என ஆகமுடியும்.



(B) அப்பா/ அம்மா/ கணவன்/ மனைவி/
குழந்தை/ உறவு/ சுற்றம்/ நட்பு/ என
இருந்தால், அது ஜீவ சொரூபம் அசைவன
அறிவுள்ளன ஆகும் இவர்களின் நாம ரூப இனம்
குணமாக பாராட்டுவதால் உன் தோஷ குணமும்/
அவர்கள் தோஷ குணமும் பின்னிப்பிணையும்.
மேலே கூறிய, அவர்கள் அனைவருக்கும் ஆலி வேஷம்
பொம்மை வேஷம் போடப்பட்டிருக்கிறது.
உள்ளே இருப்பது நம் ஸ்ரீ பகவானே என்ற உள்
உணர்வாக இருந்தால், இருப்பும்/ இயக்கமும்/
ஒன்றில் உணர முடியும். என்று சொல்வதை
அவன் உணர்த்துவான். (A) ல் கூறிய நிலையும்/
(B) ல் கூறிய நிலையிலும் எண்ணம் வந்தால்,
கர்ம சம்பந்த எண்ணம், குறைந்து, குறைந்து,
நின்று விடும். அதுவே எண்ணமற்ற நிலையாகும்.
ஆகவே, எண்ணமற்றிருப்பதுவே, சிவம் ஆகும் என்றும்.
அதுவே நாம்/ நாமே அது/ என அனுபவம் பெற முடியும்.



ஸித்தே சித்தமாக மாறி செயல்படும் போது, நாமரூப ஆகத்துவ சொரூபங்களாக உருவ பண்ணி சொந்த பந்த பாசபிணைப்புகளை உண்டுபண்ணும். அதுவே ஸித்தாகவே செயல்பட்டாலும், ஸித் அசைக்கும் நிலையை பெற்று விட்டால் பரநிலையென்ற ஏ.சநிலைக்கும் வழிவகுக்கும்.

(81)


தொடரும்.

பாடல்13

முதல் நான்கு வரிகள்.

சித்தம் என ஒருபொருள் இங்கு உள்ளதென்று,
சிறிதேனும் சிந்தித்தால் உடனே ஸித்தே,
சித்தமாய் (மாறி) தோன்றும். அந்த சித்தமே,
ஜக/ ஜீவ/ பரம் நிலையில் தோன்றி துன்பம் கொடுக்கும்.

பொருள்:- ஸத்தாது இருக்கும் போது, அது அசைவற்றது. அது ஆசையற்றது. அச்ஸத்தே, ஸித்தாக மாறும் போது, அசையும், அசைக்கும் தன்மையை பெறுகிறது. அச்ஸித்தே சித்தமாய், மாறும் போது, அசைகிறது. அசைக்கிறது. அசையவும், அசைக்கவும், செய்யும் போது, மனோநிலையின் இன்பதுன்பமாக, அனுபவிக்கிறது. அறிவின். நிலையில், ஆனந்தமென்றே அனுபவிக்கிறது. அறிவின் நிலையில், ஸத்/ ஸித்/ ஆனந்தமாகும். மனோநிலையில், நாமரூபம்/ சித்தம்/ இன்பதுன்பம்/ என மாறிவிடுகிறது.




ஸத்தானது ஈசநிலையில்
ஈடுபடும் போது அங்கு (82)
மாயா சம்பந்தம்
கொள்வதால் ஸ்ரீபகவத்
பிரேமையில் சித்தி
கொண்டு பக்தியில்
ஸம்பந்தம் விலகும். அதே
ஸித்தின் பரவுணர்வை
அகற்றுவதால் மட்டுமே அந்த தெய்வ
பந்தமும் அநுபவம். ஆகவேதான் ஜக ஜீவ பரநிலையில்
தோன்றி துன்பம் உண்டாகின்றன என்பது முடிந்தது.

ஸத், ஸித், ஆனந்தம் / (உணர்வு) மயமாகும். நாமரூபம் / சித்தம் / இன்பதுன்பம் (உணர்ச்சி) மயமாகும். முந்தையது, பரசொரூப நிலையாகும். பிந்தையது, ஜக சொரூப நிலையாகும்.

மனம் / புத்தி / சித்தம் / இம்மூன்றும் வெவ்வேறு இல்லை. இப்பாடலில், சித்தத்தை குறிப்பிடுவதால், அதைமட்டும் எடுத்துக் கொள்வோம்.

முன் கூறிய, விளக்கப்படி, (ஸித்துதான்) (சித்தமாக) மாறுகிறதேயன்றி, சித்தம் என, ஒரு வஸ்து இல்லை. இந்த சித்தமும், ஏன் அவ்வாறு மாறுகிறது என்றால் நாம ரூப, ஜக ஜீவ, தோற்றங்களை, உண்டு என, விளக்கும் நிலையில் தான் வந்தது. இந்த (ஜகத்தை) நாமரூபமாக, உண்டு என நம்பினால் (சித்தம்) உண்டு. நாமரூப ஜகம் இல்லை (மண்தான்) உண்டு என்ற, ஞான உணர்வு இருந்தால் அது ஸித்சொரூபமே. அங்கு ஸித்தாகிய மண்ணே / மண்ணாகிய பரமே / பரமாகிய நாமே / நாமாகிய பரமே / எனவுணரப்படும்.






சித்தமாகத் தோற்றினால், அங்கு நாமரூப ஜகம் உண்டு. ஸித்தாக விளங்கினால், அங்கு பரமாகிய நாம் உண்டு.


பாடல் 17. கடைசி நான்கு வரி.

எல்லாமும் பரப்பிரம்மம் நாமே என்றிருந்து,
எப்போதும் பாவித்து மனதை வென்று,
சொல்லாலும் சொல்ல வொண்ணா பரமேயாகி,
சும்மாவே இருந்து மஹா சாந்தியாவாய்.

பொருள்:- எல்லாம் பரப்பிரம்மம் என்ற, பிரம்மான்ம பாவனையானது, விட்டுவிட்டு செய்வதல்ல. காலம் பார்த்து செய்வதல்ல. தராதரம் பார்த்து செய்வதல்ல. விலக்கி இணைத்து செய்வதல்ல. விருப்பு வெறுப்புடன் செய்வதல்ல. பேதம் கண்டு விலகி, விலக்கி செய்வதல்ல. நாம ரூபங்கள், எண்ணிச் செய்வது அல்ல. வேறு எந்த மார்க்கமாகவும்,



செய்வதல்ல. பிரம்மாண்ம பாவனை/என்ற
அகம் பிரம்மம்/ ஜெகம் பிரம்மம்/ அகமே எல்லாம்/
எல்லாம் யாமே/ யாமே எல்லாம்/ என்பதை,
(தைல தாரை போல்) அதாவது நீர் தாரை போல்
(சொட்டு சொட்டாய்) விழுவதல்ல. தைலம் தேன்
போல், (நூல் இழை) போல்/ இடையறாது இருக்கும் பாவனை
நிலையாகும். இப்படி இடையறாது பாவனை செய்தால்,
மட்டுமே, மனம் அழிந்து மறைந்தாகும்.
சொந்த பந்தங்களை, (பந்தமாக) கண்டு கொண்டு;
பொன் பொருள்களை, (பணமாக) ,, ,,
இன்ப துன்பங்களை, (என்னுடையது) என ,, ,,
இழப்பு துக்கங்களை, ,, ,, ,,
வினையின் பாவநஷ்டங்களை, ,, ,, ,,
இப்படி பல நிலைகளில், (மனதை ஆழ்ந்திக் கொண்டு)
அதுவே நாம்/ நாமே அது/ என்ற பிரம்மாண்ம
பாவனை செய்தால், அது (வீண் சிரமமே)
அது பிரம்மாண்ம பாவனை ஆகாது.





இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என்ற
பிரம்மாண்ட பாவனையானது/திட உணர்வாக
இருக்க வேண்டும். அதாவது ?

பேரிடி விழுந்து உடலே சிதைந்தாலும்,
உலகமே அழிந்து நிர்மூலமானாலும்,
இது நாமும் அல்ல. இது நம்முடையதும் அல்ல.

நாம் அதுவே என்ற பேருணர்வோடு
இருப்பதுவே, அகண்டாண்ட பாவனையாகும்.
இந்நிலையில் தான், மனதை வெல்ல முடியும்.
இந்நிலை சொல்லவொண்ணு/விளக்கவொண்ணு நிலை ஆகும்.
இதுவே சொல்லற சும்மாவே, சுகமாகவே
மஹா சாந்தியாகி/மௌனமாகும் நிலையாகும்.


பாடல் 22.

கனவின் பொருள் நனவில் இல்லை.
நனவின் பொருள் கனவில் இல்லை.
கனவில் பொருள் நம்மை நாடி வருகிறது.
நனவின் பொருளை நாம் தேடி போகிறோம்.
இதில் ஓர் விசித்திரம் என்னவென்றால்?



பொருள்:-


முன்பே கூறினேன். இவ்வுலகமாகிய, பெரிய நாடக மேடையானது, ஒவ்வொரு ஜீவாத்மாவும், அவரவர் புண்ணிய பாப விதியின்படி, கொடுத்தும் வாங்கியும், வாக்கால் விளக்கம் பேசியும், விளக்கம் கேட்டும், பற்று வரவை, லாப நஷ்டத்துடன், புண்ணிய பாபங்களாக, பதிந்த வண்ணம், முன் கணக்கு முடிந்தும், பின் கணக்கு தொடரும் நிலையாலும், ஒழுங்காக, பாரபட்ச தோஷம் இல்லாமல், விகிதாச்சாரப்படி அனைவரும், நடக்கிறேன். நடந்தே ஆக வேண்டும் என்பதே விதி, நியதி, இதை எவரும் மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ, முடியாது என்பதே ஸத்தியம். எந்த ஸ்ரீ மஹாத்மாவும் இதில் விதிவிலக்கில்லை. ஸ்ரீ மஹாத்மா என்பது உடலல்ல. உள் உள்ள, சைதன்யமே மஹாத்மா ஆகும்.



இவை முன்பே, பல மடல்களிலும் தந்த தெளிவான விளக்கம் தான். இதன் உள் விளக்கம் தருகிறேன் உணர்வால் உணர்க.


(A) ஜாக்ரதா என்ற நனவில் நாம் காணும், தேடும், தொடும், நாமரூப பொருள்கள் அனைத்தும், நாம ரூப தூல வஸ்துவாகும். அதை காணும், தேடும், தொடும், நாமும் நாமரூப தூல வடிவமே. இங்கு நம் வினையின்படியே நிகழ்ச்சிகள் யாவும், நடைபெறுகிறது. நம் எண்ணம், சொல், செயல், இம்மூன்றும், கர்ம சம்பந்தமே. ஆகவே ஜாக்ரதாவில், அதி ஜாக்ரதையாக இருக்க வேண்டும். காரணம் நாம் தான் கர்மபொருளை, தேடி, ஓடி, நாடி, செல்கிறோம். அது நம்மை, தேடி வருவதில்லை, என்பதே சத்தியம்.





B) சொப்பனம் என்ற, கனவானது, நிகழும் போது,
நம் தூலமானது, ஜடமாக விழுந்து கிடக்கிறது.
மன எண்ணமே, முன் பின் நிகழ்ச்சிகளை,
எண்ணி எண்ணி, நாமரூப பொருள்கள்!
உறவு, சுற்றம், நட்பு ஆகியவைகளை, நம்
உள்ளே தொணர்ந்து, ஓர் படக்காட்சியை
காட்டுகிறது. இங்கு அப்பொருள்களை, நாம்
தேடிச் செல்வதில்லை. அவை தேடி வருகின்றன.
ஆகவே, இங்கு காணும் நாமும் சூட்சமம்
நம்மை தேடி வரும் பொருளும் சூட்சமம்.
சூட்சமத்தில், எந்த வினையும் ஒட்டாது. ஒட்ட
முடியாது. ஒட்டவியலாது, என்பதே சத்தியம்.
இக்கனவு முன்னேயாக சில நிகழ்ச்சிகளை காட்
டலாம். ஆனால் எல்லாம் பொய்யே!
ஜாக்ரத்தில் உள்ள, வினை சம்பந்த நிகழ்ச்சிகள்,
எது நடந்தாலும், அதுவும் சுத்தப் பொய்யே.


(49)



உ உறக்க நிகழ்ச்சிக்கு பாடல் 9ல்
முதல் நான்கு வரிகளை காணலாம்.
இந்த உறக்கத்தை, சுழுத்தி எனவும் சொல்லலாம்.

இருமையில்லா சுழுத்திதனில், ஏகமாக
இருக்கின்ற, ஆன்மாவே தம்மிடத்தில்,
மருவியிடும் மாயா சக்தியினை கனவின்
கண்ணே
மனமுதவாக தோற்றியிடும். என்கிறார்.
சுழுத்தியில் இருமை இல்லையென்கிறார்.
இங்கு நம் ஆன்மாவும், நம் மனமும்,
கணவன்மனைவி உறவு எப்படியோ அப்படி
இணைந்து சேர்ந்து ஈருடல் ஓருயிர் என,
ஒன்றி இருக்கிறது. சிவந்து மயமாக வில்லு
செயல்படாத பரமும், செயல்படும் மாயா
வும், இணைந்து பிணைவதால், இரண்டின் சேர்க்கையால்
நாமரூப ஜகம் (மூன்றாவது ஒன்று)
உண்டாவது போல,

(90)




உறக்கத்தில் ஆன்மாவும் & மனமும் இணைந்து பிணைவதால்,
கனவின் நாமரூப பொருளை, தானே சிருஷ்டிக்கிறது என, அறிய வேண்டும். அங்கு
ஸ்தூல தாவமும் & ஸ்தூல பொருளும் இல்லாமல்
சூட்சும தாவமும் & சூட்சும பொருளும் கலந்து
உறவாடலால், ஸ்தூல சம்பந்தம் இல்லையென அறிக.

இதனால்?

1. நனவில் சஞ்சாரம் செய்வது, தூல உடல் என்றும்
2. கனவில் ,, ,, சூட்சும உடல் என்றும்,
3. உறக்கத்தில் சஞ்சாரம் செய்யாமல், மனம் ஆத்மாவுடன், இருக்கும் நிலை, காரண உடல் என்றும்
4. ஞான விசாரணையால், மனம் அழிந்தவர்களுக்கு, மனமற்ற ஆன்மாவை, மஹாகாரணம் (காரண உடலில்லை) என்றும். அனுபவ ஞானிகள், சொல்லக் கேள்விப்படுகிறோம்.

(91)




ஜாக்ரத்தில் (விழிப்பு நிலையில்) கவனமாக
இருளைச் சொல்வது, விஷய குண தோஷம்
பற்று நிலைக்கு, (சர்வார்ப்பணத்துடன்) இருப்பாயாக.

பாடல் ௯௫.

பரப்பிரம்மமானது, அவித்தையினால்
(மனசம்பந்தத்தால்)
நாம ரூப ஜக ஜீவ பரமாக தோற்றும்.
பரப்பிரம்மமானது, வித்தையினால்,
(மனம் மறைந்தால்)
மாசு மறுவற்ற, குற்றமற்ற, பரமேயாகும்.

பொருள்:— காலாதீத பர சொரூபமானது,
மாயாசம்பந்தத்தால், நாம ரூபம் பெறுகிறது.
மனக் கற்பனையால், ஜக ஜீவ, சொரூபங்கள்
நாம ரூப, சொந்த, பந்த, பாசமாகவும், தோற்றும்.
மனக் கற்பனையால், ஈஸ்வராதிகளாகவும்!
அவர்களின் உலகங்களாகவும் தோற்றும்.
இது மனதின் (அவித்யா) (வாஸனையாகும்).




இது மனோ சலன சபல சந்தேகம் ஆகும்.
இது அவித்தை என்று பேசப் படுகிறது.
அதேமனம் வித்தையால் என்றும் ஞான
விசாரணையால் நாமரூபம் சூட்சுமம்
அனைத்தும், அழிந்து நாசமாகும். அவ்விடத்து,
எல்லாம் மண்ணே! மண்ணே எல்லாம்!
மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என
திட உணர்வுடன், சும்மா சுகமாக இருக்கலாம்.

பாடல் 31. கடைசி நான்கு வரிகள்.

சகலமுமே பிரம்ம மென்றும், அது நாம் என்றும்,
சந்ததமும் சலியாது தியானம் செய்தால்,
அகம் அன்னியம் ஜகமுதலியது அன்னியம் என்னும்,
அயலாக தோற்றுவது சர்வநாசம் ஆகும்.


பொருள்:- முன்னர் பல பல, பாடல்களில்
கூறியபடி, அகம் பிரம்ம (நாமே அது)
நிச்சயத்தை, தைல தாரை போல் தியானம் செய்தால்.





(A) நாமரூப ஜடசொரூபம் வேறு;
நாம் பக்தன் ஞானி என்ற நடுவில் ,, ;
அனைத்து உயிரினங்களும் ,, ;
ஸ்ரீபகவான் சூட்சும சொரூபம் ,, ;
என்று, வேறு வேறாய் பிரித்து பேதமாய்
உணரும், மனமயக்கம், நீங்கி நாசமாகும்.
எப்படி என்றால்?

(B) எல்லாம் மண்ணே/ மண்ணுக்கு வேறாக, எதுவும் இல்லவே இல்லை. அனைத்திற்கும், விதவிதமான, நாமரூபம், கொடுத்தது அந்த மாயா மனமே ஆகும். எப்படி இந்த மனம், அனைத்திற்கும், கற்பனையான, நாமரூபம், கொடுத்ததோ, அதே மனமே, அனைத்தையும், மண் என, உறுதி நிச்சயம் செய்து விட்டால், எல்லாம் பர ஒளியாய்/ பர வெளியாய்/ எல்லாம் அகண்ட ஜோதியாய்/ நாம் அனைவரும், அந்த அகண்ட ஒளியாய் பிரகாசிப்போம் இது சத்தியம்.




பாடல் 36

குமக்கு அன்னியமே தோன்றாத அகண்டாகார
அறிவுதனை அடைந்தவனே (ஜீவன்) முக்தனைவான்.

பொருள்:- இதில் ஓர் முக்கிய பொருள்
பொதிந்திருக்கிறது. அது என்னவென்று கீழே
கவனிக்கவும்.


மனம் இருந்தால், அது தூல துவைதமே.
அறிவு ,, ,, சூட்சும துவைதமே.
பேரறிவு என ஆனால், அது தூல & சூட்சும
நாமரூபங்களை, சர்வ நாசம் செய்த நிலையில்,
தூலத்தை, மண்ணை மதித்த நிலையால் மனோ
நாசம் செய்த அத்வைதமே.

சூட்சுமத்தை மாயாவாத
தன்னிய நிலையால், மாயாமயக்கத்தை நாசம்
செய்து, தாமே பேரறிவாகவும், பேரறிவே
தாமாகவும் ஆனவன் நிலையை வாக்காலும்,
வரியாலும், விளக்க முடியாது என்பதே சத்தியம்.




இந்த ஞானியானவன், தூல கண்களுக்கு
சாமான்யனாய் காணப்படுவான்.
இந்த ஞானியானவன், சூட்சுமத்திலும் அதி
சூட்சுமமாக, சஞ்சாரம் செய்வான். அங்கு
மண், மாயா, மந்திரம் இராது.

இந்த ஞானியை, தேவ தெய்வங்களும், கம்
மாயாவால் துவங்கச் செய்ய முடியாது. இயலாது.
இயங்கச்செய்யவும் முடியாது. இயலாது.
அவன் வந்தகாரணத்தின் படி தான், இருப்பும்
இயக்கமும் அமையும். யோகமாயா இவன்
பின்னணியில் நிற்கும் என, ஸ்ரீமஹான்கள்
வாயிலாக அறிகிறோம். தாவராதீத பரமும்,
யோகமாயாவும் தான், அவன் இருப்பாகவும்
இயக்கமாகவும் அது அதி பிரம்ம ரகஸ்யமாக
இருக்கும் என, அனுபவ ஸ்ரீ மஹான்களின்,
வாயிலாக அறிகிறோம்.



96

ஆகவே தான், இவனை திரிலோகத்தில் ஒரு நாணி
என, சொல்கிறார்கள் போலும்? இதன் ரகசியம்?
தனக்கு அன்னியமாய், எதுவும் இல்லாமல்
போக வேண்டுமானால், நாமரூபம் அனைத்தும்
நாசம் ஆக வேண்டும்.
நாமரூபம், நாசமாக வேண்டுமானால், நாமரூபம்
அனைத்தும் மண் ஆக வேண்டும்.
நாமரூபம், மண்ணாக வேண்டுமானால், வினை
இல்லாதொழிய வேண்டும்.
வினையில்லாது ஒழிய வேண்டுமானால், ஜீவ
கர்த்தத்துவம் அழிய வேண்டும்.
ஜீவ கர்த்தத்துவம் அழிய வேண்டுமானால், ஈச
கர்த்தத்துவம் ஆக வேண்டும்.
ஈச கர்த்தத்துவம் ஆக வேண்டுமானால், சர்வார்ப்பணம்
முழு நிலை பெற வேண்டும். பிரம்மார்ப்பணம் ஒன்றே,
சர்வார்ப்பணம் முழுநிலை பெறும் நிலையாகும்.
பிரம்மார்ப்பணம் முழுநிலை பெறும் நிலையில், இருப்பது
ஒன்றே நடப்பது நவமே என்ற, அசைவற்ற நிலையாமே
என ஸ்ரீமகான்கள் வாயிலாக அறிவோம்.



அதேபாடலில் கடைசி இரண்டு அடிகள்.

அன்னவனை தரிசித்த மாத்திரத்தில்,


அறம்மேவாகும் அதனில் அறம் அழியும்.

பொருள்:- அந்த ஞானியை தரிசிப்பது என்பது.

(A) திருமேனிகாண்பது (B) திருவார்த்தை கேட்டல் (C) திருநாமம் செப்பல். (D) திரு உரு சிந்தித்தல். என நான்காகும்.

(A) திருமேனி காண்பது:- தர்ஸனம், ஸ்பரிஸனம், சேவை, இம்மூன்றும் அடங்கும்.


(B) திருவார்த்தை கேட்பது:- கருவி கரண ஒழுக்கம் இது அத்வைதத்தின் அடிப்படை. ஓர் ஸத்சிஷ்யன், மேலே கூறிய, இவ்விரண்டையும் சிரத்தையுடன் அனுஷ்டித்தால், புண்ணியம் தர்மமாக மாறுவதால் அறம் மேவோங்கும்.





C திருநாமம் செப்பல் :- இது குருநாமம்
சொல்வதல்ல. அவர் அருளும், உபதேச கருத்
துக்களை இறை குரு திருவையால் முறையாக,
விளக்கமனம் சம்பந்தத்தால் ஏற்று
மனனம் செய்வதும் பிறர் பிறநால்
கருத்தை ஏற்காத நிலையாகும்.


D குரு உரு சிந்தித்தல் :- ஸத்குருநாதனின்,
ஒலி (வார்த்தை) ஒளி (அனுபவம்) அதாவது,
வாய் ஞானம் இல்லாமல், அனுபஞானமாக ஏற்று,
அமைதியின் ஆனந்தம், என்பதே குரு உரு
சிந்திப்பதாகும். பின் கூறிய இவ்விரண்டினையும்.
அறம் அழியம் என்றால்?
கவனக் குறைவின், மனம் அழிந்து, மறந்தாலே.
மனே நாசமே அறம் அழியும் நிலையாகும். இங்கு
அவனே நாம்! நாமே அவன்! என்னும் சிவ அனுபவ நிலையில்,
இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என்பதாகும்.




பாடல் 37.

பேசிய இந்த நிச்சயமும் சமாதிவிட்டு,
பிரிவுற்ற காலத்திலே உள்ளதன்றே,
பாசமில்லா சமாதிதனில் இருக்கும்போது,
பரவிய இந்த நிச்சயமும் அறிஞர்க்கில்லை.
சாசுவத சமாதி தனிலே சலனமற்று,
சங்கல்ப விகல்பங்கள் அனைத்தும் அற்று,
ஆதியில்லாத பரம ஆனந்த
அனுபவத்தோடு
ஆவரண மயக்கமின்றி அசஞ்சலமாய் நிற்பனே.

பொருள்:- முன் கூறிய, ஆத்மானந்த அனுபவம் பெற்றவனுக்கு, சமாதி நிஷ்டா சாதனம் தனியாய் இல்லை. தனியே வேண்டாம். காரணம்:-
அவனிடம் சொந்த பந்த பாசம் இராது.
பொன் பொருள் போக மயக்கம் இராது.
பெண்ணின்ப காம மோகமும் இராது.
கணவன்/மனைவி/குழந்தை/உறவு இராது.
அண்ணன் தம்பி/அக்கா தங்கை/உறவு இராது.
கொடுத்தல் வாங்கல் உணர்ச்சிகள் இராது.



போக்குவரவுகளில், மயக்கம் இராது.
பாபநஷ்ட பிறப்பு இறப்பில், கலக்கம் இராது.
வறுமை, பிணி, நரை ஜரை, பயம் இராது.
முக்குணமும், துர்க்குணமும், இணைந்த மயக்கம் இராது.
சூலம், சலனம், சந்தேக, களங்க, கலக்க பயம் இராது.
மேலே கூறிய, அனைத்தையும் கூறிய,
நாம ரூப ஆவரண மயக்கமும், அவை
உண்டு, இல்லை, என்றநிலையில் விட்சேப
கலங்க கலக்கமும் அணுவும் இராது.
இப்படி இருக்கும் திடஞானிக்கு, தனியே
நிஷ்டை சாதனை சமாதி ஏன்? எதற்கு?
ஆட்டபாட்டமெல்லாம், பொம்மலாட்டமாகும்!!
காட்சி நிகழ்ச்சியெல்லாம், திரைக்காட்சியாகும்!!
எல்லாம் மண்ணாகி, அவனும் மண் ஆகிப்
போனவனுக்கு, இங்கு இருப்பு இயக்கமேது?
இருப்பு இயக்கம் எதற்கு?



101

அவன் இருந்தும், இல்லாதவனேயாகும்!
அவனுடைய, உலக விவகாரம், பிரச்சனை
எப்படி இருக்கும் என்றால்?
பிணத்திற்கு மணம் செய்தது போலாகும்!!
அவன் இருந்தும், இல்லாதவனே என்றால்?

---

மரம் எப்படி, மண்ணைத் இருக்கிறதோ? அதே நிலையில், அவனும் மண்ணாவான். மண் எப்படி இருக்கும் நிலையில் இருந்து கொண்டு, இயக்கம் அற்றிருக்கிறதோ, அப்படி இயக்கம் அற்று இருப்பான். ஆனால் அவன் மண்ணைத் இந்தாலும், நாமரூப, ஜகஜீவ-ஈஸ்வராதிகளுக்கு ஆதாரமாகவும், ஆதாரவாகியும், ஆகாரமாகியும் இருப்பான். அவனன்றி, நாமரூப ஜகஜீவ ஈஸ்வராதிகள் இல்லை. நாமரூப ஜகஜீவ-ஈஸ்வராதிகள், இன்றி அவன் அது வாயிலுண்டென, ஸ்ரீமகான்களின், வாயிலாக அறிகிறோம்.

இருப்பது ஒன்றே! நடப்பது நலமே.

பாபா

எல்லாம் ஒன்றே! அது யாமே! யாமே அது! இது வாக்கியம்.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!